## திருமண பந்தங்களை முறிப்பவை - 1

### Terms & Rules break the nikah relationship

### (நிகாஹ்) திருமண உறவை முறிக்கும் ஃபிக்ஹு சட்டங்கள்

**النكاح - நிகாஹ்** (திருமணம்) வலீ, இரு சாட்சிகள்,மணமக்களின் சம்மதம் (ஈஜாபு-கபூல்), மஹர் தொகை கொடுத்துத்திருமணம் செய்வது

**الطلاق- தலாக்** (மணமுறிவு) கணவன் மூன்று முறைகள் வெவ்வேறு காலங்களில் தலாக் கூறி மணவிடுதலை செய்வது. ஒரே தடவையில் முத்தலாக் கூறுவது கூடாது.

**الخلع – குல்உ** ( விடுபடுதல்) மனைவி, நடுவர் (ஹாக்கிம்) அல்லது ஜமாஅத் தலைவர் மூலம் மஹர் தொகையைத் திருப்பிக் கொடுத்து மணவிடுதலை பெறுவது.

**الفسخ – ஃபஸ்கு** (முறித்தல்) கணவன்,மனைவி இருவரும் சேர்ந்து வாழ முடியாத நிலையில் ஹாக்கிம் (நடுவர்) மூலம் இருவரது திருமண பந்தத்தை முறிப்பது.

**الايلاء- ஈலாஃ** (சத்தியம் செய்தல்) மனைவியுடன் உறவு கொளவதில்லை என பொதுவாகவோ, அல்லது 4 மாதங்கள் வரை மனவியுடன் தாம்பத்ய உறவு கொள்வதில்லையென சத்தியம் செய்வது. ஈலா (மனைவியுடன் உடலுறவு கொள்ள மாட்டேன் என்று சத்தியம்) செய்தவருக்கு நான்கு மாதம் காத்திருத்தல் வேண்டும்.

**(அல் குர்ஆன் 2:226)**

**النشوز – நுஷூஸ்** (மறுப்பது,விலகுவது) கணவனுக்கு மாறு செய்வது. கட்டுப்பட மறுப்பது., கணவனைவிட தன்னை மேலாகக் கருதுவது. கணவன் நான்கு மாதங்களுக்குள் மனைவியுடன் சேர்ந்துவிடவேண்டும். இல்லையேல் மணமுறிவு (தலாக்) ஏற்பட்டுவிடும்.

**الظهار – ளிஹார்** (மனைவியைத் தாய்க்கு ஒப்பிடுதல) ‘ளிஹார்’ என்பது தனது மனைவியைத் தாய்க்கு ஒப்பிடுவதாகும் **(அல் குர்ஆன் 58:02)** ளிஹார் செய்தவர் தன் தவறை உணர்ந்தால் உடலுறவு கொள்வதற்கு முன் ஓர் அடிமையை விடுதலை செய்யவேண்டும். இல்லையெனில் தொடர்ந்து இரு மாதங்கள் நோன்பிருக்கவேண்டும். அல்லது 60 ஏழை களுக்கு உணவளிக்க வேண்டும்.

**(அல் குர்ஆன் 58:3,4)**

(கத்ஸமிஅல்லாஹ் ஸூராவில் கவ்லா பின்த் தஃலபா தன் கணவர் அவ்ஸ் இப்னு ஸ்ஸாமித் ளிஹார் செய்தபோது நாயகத்திடம் வந்து முறையிட்டார்.அப்போது இந்த **(அல் குர்ஆன் 58:3.4)** மூலம் கணவனுடன் வாழ வழி செய்கிறது)

**اللعان – லிஆன்** (சபித்தல்) ஒழுக்கமுள்ள பெண்கள் மீது அவதூறு (பழி) சுமத்தி நான்கு சாட்சிகளை கொண்டு வராதவருக்கு 80 கசையடிகள் கொடுக்க வேண்டும்.

சாட்சிகள் இல்லாது தமது மனைவியர் மீது பழிசுமத்தும் கணவர், தாம் உண்மையாளர் என நான்கு தடவைகள் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்வேண்டும். பின்னர் தான் பொய்யனாக இருந்தால் அல்லாஹ்வின் சாபம் தன்மீது உண்டாகட்டும் என ஐந்தாவதாக கூறவேண்டும். அது போல மனைவி ‘அவனே பொய்யன் ‘ என நான்கு தடவைகள் சத்தியம் செய்துவிட்டு, ஐந்தாவதாக அவன் உண்மையாளனாக இருந்தால் அல்லாஹ்வின் சாபம் தன்மீது உண்டாகட்டும்’ என சத்தியம் செய்வாள். பார்க்க **(அல் குர்ஆன் 24:6,7)** ’லிஆன் செய்து கொண்டோர் மீண்டும் திருமணம் செய்து கொள்ள முடியாது.’